# பூமியில் குமாரனுடைய தெய்வீகத்தை அவரது சுய விழிப்புணர்வு பிரதிபலிக்கின்றது

*இயேசுவின் தெய்வீகத்துவத்தைப் பற்றிய சாட்சியத்தின் ஒரு பகுதியாக இருப்பது அவரது தெய்வீக விழிப்புணர்வு ஆகும். இயேசுவின் தனிப்பட்ட வாழ்வு பற்றி நாம் சிறிதளவே தகவல் பெற்றிருந்தாலும், சுவிசேஷ விபரங்களில் நமக்குத் தரப்பட்டுள்ள உட்கண்ணோட்டங்கள் அவர் தமது தெய்வீகத்துவத்தைப் பற்றிய விழிப்புணர்வுள்ளவராய் இருந்தார் என்று விளக்குகின்றது. அவர் தெய்வீகமான தமது சர்வ ஞானத்தையும் சர்வ வல்லமையையும் தமது ஊழியத்தில் கருவியாகப் பயன்படுத்தினார். அவர் தாம் மீட்பர் என்ற வகையில் தமது பங்கை நிறைவேற்றுகையில் நடக்கும் எல்லாவற்றையும் - நிகழ் காலத்திலும் எதிர்காலத்திலும் மற்றவர்களின் சிந்தனைகள் மற்றும் செயல்பாடுகள் உட்பட யாவற்றையும் - அறிந்தவராய் இருந்தார்.*

## *பிதாவுடன் தமது உறவைப் பற்றிய அவரது அறிவு*

*சிறு பையனாயிருந்த காலம் தொடங்கி, ஏறக்குறைய பார் மிட்ஸ்வா[1] வயது தொடங்கி, இயேசுவானவர், தமது பிதாவினுடைய திட்டங்களில் தமது பங்கைப் பற்றிய உணர்வுள்ளவராய் இருந்தார். தேவாலயத்தில் யோசேப்பும் மரியாளும் அவரைக் கண்டடைந்த பொழுது, பின்வரும் உரையாடல் தொடர்ந்தது:*

> *... மகனே! ஏன் எங்களுக்கு இப்படிச் செய்தாய்? இதோ, உன் தகப்பனும் நானும் விசாரத்தோடே உன்னைத் தேடினோமே என்றாள். அதற்கு அவர்; நீங்கள் ஏன் என்னைத் தேடினீர்கள்? என் பிதாவுக்கடுத்தவைகளில் நான் இருக்க வேண்டியதென்று அறியீர்களா? என்றார் (லூக். 2:48-49).*

*இயேசு யோசேப்பைக் குறிப்பிடவில்லை. அவர், "உன் தகப்பனும்" என்று மரியாளின் சொற்றொடருக்கும் ''என் பிதாவுக்கு'' என்ற தமது வார்த்தைகளுக்கும் உள்ள வேறுபாட்டைத் தெளிவாகக் காட்டினார். இயேசு தமது பரலோகப் பிதாவுடனான தமது தெய்வீக உறவைப் பற்றி விழிப்புணர்வற்றவராய் இருந்தார் என்பதற்கான ஆதாரமெதுவும் இல்லை. முழுவதும் இதற்கு நேர்மாறானதாகவே உள்ளது!*

*இயேசுவின் தெய்வீகத்துவம் என்ற வெளிச்சத்தில் இந்த பிதா/குமாரன் உறவுமுறை எதை அர்த்தப்படுத்துகின்றது? இன்னொரு இடத்தில் அவர், "சகலமும் என் பிதாவினால் எனக்கு ஒப்புக் கொடுக்கப்பட்டிருக்கிறது; பிதா தவிர வேறொருவனும் குமாரனை அறியான்; குமாரனும், குமாரன் எவனுக்கு அவரை வெளிப்படுத்தச் சித்தமாயிருக்கிறாரோ அவனும் தவிர, வேறொருவனும் பிதாவை அறியான்'' (மத். 11:27). இது உலகளாவியவற்றையும் (சகலமும்) மற்றும் தனிப்பட்ட தன்மையையும் ("பிதா தவிர ..... குமாரன் தவிர") நிச்சயப்படுத்துகின்றது. தனிச் சிறப்புள்ள இந்த பிதா/குமாரன் உறவானது மிக நெருங்கிய, தெய்வீகமான உறவை உள்ளடக்காத வரையில் ஒன்றையும் அர்த்தப்படுத்துவதில்லை. பிதா, குமாரனுடன் கொண்டுள்ள இந்த உறவானது குமாரன் தாம் தேர்ந்து கொள்பவர்களுக்குப் பிதாவை வெளிப்படுத்தக் கூடியவராக்குகின்றது.[2]*

*இயேசு தமது சீஷர்களிடம் கூறிய சில கூற்றுக்களின் பின்னால் இந்த "தெய்வீக ஊக்குவித்தல்" அமைந்துள்ளது. உதாரணமாக, கேள்வி கேட்ட தோமாவிடம் இயேசு தாம் மட்டுமே பிதாவினிடத்தில் சென்றடையும் வழியாக இருந்ததாக(மற்றும் இருக்கின்றதாக)த் தகவல் தந்தார். அப்பொழுது பிலிப்பு, தங்களுக்குப் பிதாவைக் காண்பிக்கும்படி கேட்டுக் கொண்டார். அதற்கு இயேசுவின் பதிலுரையானது அவர் தம் அடையாளம் பற்றிக் கொண்டிருந்த உணர்வுக்கு அற்புதமானதொரு முன்மாதிரியைக் கொடுக்கின்றது:*

> *என்னைக் கண்டவன் பிதாவைக் கண்டான்; அப்படியிருக்க, ''பிதாவை எங்களுக்குக் காண்பியும்'' என்று நீ எப்படிச் சொல்லுகிறாய்? நான் பிதாவிலும், பிதா என்னிலும் இருக்கிறதை நீ விசுவாசிக்கிறதில்லையா? நான் உங்களுடனே சொல்லுகிற வசனங்களை என் சுயமாய்ச் சொல்லவில்லை; என்னிடத்தில் வாசமாயிருக்கிற பிதாவானவரே இந்தக் கிரியைகளைச் செய்து வருகிறார். நான் பிதாவிலும் பிதா என்னிலும் இருக்கிறதை நம்புங்கள் (யோவா. 14:9ஆ-11அ).*

*தாம் பிதாவல்ல என்பதை அவர் அறிந்திருந்தார்; தாம் பிதாவினுடைய குமாரன் என்பதை அவர் அறிந்திருந்தார். இவ்விருவரும் ஒருவரைக் கண்டால் இன்னொருவரைக் கண்டதாகும் என்ற அளவுக்கு மிகவும் நெருக்கமான உறவுடையவர்களாய் மற்றும் ஒருவருக்குச் செவி கொடுத்தால் இன்னொருவருக்குச் செவி கொடுத்ததாகும் என்ற அளவுக்கு மிகவும் நெருக்கமான உறவுடையவர்களாய் இருந்தார்கள்.*

*இன்னொரு முறை இயேசு பிதா செய்கின்றதெதுவோ அதையே*

*குமாரனும் செய்கின்றார். ஏனெனில் இருவரும் ஒருவரையொருவர் அந்த அளவுக்கு அறிந்துள்ளனர் என்று கூறியபோது இதைத் தாண்டி இன்னும் அதிகமாகக் கடந்து சென்றார். ஜீவனும் நியாயத்தீர்ப்பும் பிதாவினால் குமாரனிடத்தில் ஒப்புவிக்கப்பட்டுள்ளது; ஆகையால், பிதாவும் குமாரனும் கனப்படுத்தப்பட வேண்டியவர்களாய் இருக்கின்றனர்:*

> *அப்பொழுது இயேசு அவர்களை நோக்கி: மெய்யாகவே நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்: பிதாவானவர் செய்யக் குமாரன் காண்கிறதெதுவோ, அதையேயன்றி, வேறொன்றையும் தாமாகச் செய்ய மாட்டார்; அவர் எவைகளைச் செய்கிறாரோ, அவைகளைக் குமாரனும் அந்தப்படியே செய்கிறார். பிதாவானவர் குமாரனிடத்தில் அன்பாயிருந்து, தாம் செய்கிறவைகளையெல்லாம் அவருக்குக் காண்பிக்கிறார்; நீங்கள் ஆச்சரியப்படத் தக்கதாக இவைகளைப் பார்க்கிலும் பெரிதான கிரியைகளையும் அவருக்குக் காண்பிப்பார். பிதாவானவர் மரித்தோரை எழுப்பி உயிர்ப்பிக்கிறது போல, குமாரனும் தமக்குச் சித்தமானவர்களை உயிர்ப்பிக்கிறார். அன்றியும் பிதாவைக் கனம்பண்ணுகிறதுபோல எல்லாரும் குமாரனையும் கனம்பண்ணும்படிக்கு, பிதாவானவர் தாமே ஒருவருக்கும் நியாயத் தீர்ப்புச் செய்யாமல், நியாயத் தீர்ப்புச் செய்யும் அதிகாரம் முழுவதை யும் குமாரனுக்கு ஒப்புக் கொடுத்திருக்கிறார். குமாரனைக் கனம் பண்ணாதவன் அவரை அனுப்பின பிதாவையும் கனம்பண்ணாத வனாயிருக்கிறான் (யோவா. 5:19-23).*

*தமது பிதாவுடனான தம் உறவுமுறை பற்றிய இயேசுவின் விழிப்புணர் வானது அவர் தமது பிதாவைப் போலவே தெய்வீகத்துவமானவராய் இருந்தார் (மற்றும் இருக்கின்றார்) என்ற அஸ்திபாரத்தின் மேல் அமைந்ததாகும்.*

## தமது தெய்வீக அறிவைப் பற்றிய அவரது விழிப்புணர்வு

*மனிதத்துவ வல்லமைக்கு அப்பால் இயேசு கொண்டிருந்த அறிவானது கவனிக்க வேண்டிய இன்னொரு பகுதியாகும். இது மிகவும் அடிக்கடி சுவிசேஷ நூல்களில் காணப்படுவதால் சுலபமாய் ஒதுக்கப்பட்டு விடுகின்றது.*

*மாற்குவின் சுவிசேஷத்திலிருந்து எடுக்கப்பட்ட பல உதாரணங்களை நாம் கவனிப்போம்: (1) இயேசு, நான்கு மனிதர்களால் தம்மிடத்தில் கொண்டு வரப்பட்ட திமிர்வாதக்காரனை குணமாக்கிய பொழுது, தம்மை நோக்கிக் கொண்டிருந்த நியாயப்பிரமாணப் போதகர்களின் சிந்தனையை அவர்கள் பேசும் முன்பே கூட அவர் அறிந்தார் என்று மாற்கு 2:8 கூறுகின்றது. (2) இயேசு தாம் மூப்பர்களாலும், பிரதான ஆசாரியர்களாலும், நியாயப்பிரமாணத்தின் போதகர்களாலும் புறக்கணிக்கப்பட வேண்டிய தாயிருந்தது பற்றித் தமது சீஷர்களிடத்தில் போதிக்கத் தொடங்கினார். அவர் கொல்லப்படுவார், ஆனால் மூன்று நாட்களுக்குப் பிறகு*

*மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுவார் (8:31; 9:9, 31; 10:33, 34). (3) அவர் தம் சம காலத்தில் வாழ்ந்தவர்களில் சிலர் தேவனுடைய ராஜ்யம் பலத்தோடே வருவதைக் காணும் வரை உயிரோடிருப்பார்கள் என்று முன்னுரைத்தார் (9:1). (4) அவர் தமது அப்போஸ்தலர்களில் சிலர் பெறப்போவதாயிருந்த துன்புறுத்தல் மற்றும் மரணம் ஆகியவற்றைக் குறிப்பிட்டார் (10:39). (5) அவர் தமது ஊழியத்தில் செயல்விளைவை ஏற்படுத்தக் கூடியது எது என்பதைப் பற்றி முன்னதாகவே அறிந்து வைத்திருந்தார் (11:2-6). (6) இயேசுவிடத்தில் கேள்வி கேட்கப்பட்ட போது, அவருடைய பதிலானது பெரும்பாலும், கேள்வி கேட்பவர்களுடைய உள்ளான சிந்தனைகள் மற்றும் எண்ணப்போக்குகளைப் பற்றிய அவரது அறிவின் அடிப்படையிலேயே அமைந்தன என்று கூறப்படுகின்றது (12:13-17). (7) தேவாலயத்திற்கு வரப்போவதாயிருந்த அழிவைப்பற்றியும் அதைத் தொடர்ந்து ஏற்படும் பெரும் துன்பத்தைப்பற்றியும் இயேசு அளவீட்டு முறையில் விவரித்தார் (13:1-23). (8) யூதாஸ் தம்மைக் காட்டிக் கொடுப்பான் என்றும், பேதுரு தம்மை மூன்று முறை மறுதலிப்பார் என்றும், அப்போஸ்தலர்கள் யாவரும் "இடறலடைவார்கள்" என்றும் அவர் அறிந்திருந்தார் (14:17-21, 27, 30).*

*வெறும் மனிதத்துவத் திறமைக்கு அப்பால் இயேசு பெற்றிருந்த அந்த அறிவானது, தீர்க்கதரிசிகள் தங்களின் முன்னுரைத்தல்களில் விளக்கிய வற்றை விடவும் மேலானதொன்றுமில்லை (அதைப் போன்றதே) என்ற நிலைப்பாட்டை ஒருவர் மேற்கொள்ளலாம். இயேசு கொண்டிருந்த இயற்கைக்கு மேலான அறிவானது - அவரது சர்வ ஞானமானது - அவரது தெய்வீகத்துவத்தினால் ஏற்பட்ட தவிர்க்க முடியாத விளைவு ஆகும், அது வெறுமனே ஒரு தீர்க்கதரிசன வரம் மட்டுமல்ல: "பிதாவினுடையவைகள் யாவும் என்னுடையவைகள்; அதினாலே அவர் என்னுடையதில் எடுத்து உங்களுக்கு அறிவிப்பார்" (யோவா. 16:15; மேலும் யோவா. 16:30; 17:10; 21:17 முதலியவற்றையும் காணவும்).*

*இயேசு எவ்விதம் தம்மைப் பற்றிய முழுமையான விழிப்புணர் வுடையவராய் இருந்தார் என்று நாம் இப்பொழுது அறியத் தயாராய் இருக்கின்றோம். இயேசு தாம் தேவனுடைய குமாரன் என்ற வகையில், தெரிந்து கொள்ளப்பட்டவர் (மேசியா) என்ற வகையிலும் தம் அடையாளத்தை அறிந்தார் என்று ஏற்கனவே நாம் கண்டோம். அவர் எவ்வளவு அடிக்கடி பின்னணியில் தம் மேசியாத்துவத்தையும், குமாரத்து வத்தையும் காத்துக்கொண்டார் என்பதையும் நாம் கண்டிருக்கின்றோம் (மாற். 8:30; மத். 16:20). அடுத்ததாக நாம், அவர் தம் கவனம் நிறைந்த கால அட்டவணையின்படி தம் அடையாளத்தை எவ்விதம் வெளிப்படுத்தினார் என்பதைக் காண்போம்.*

---

*குறிப்புகள்*

*[1]பார் மிட்ஸ்வா என்பது 13ஆம் வயதில், யூத ஆண் மத சம்பந்தப்*

பருவமடைவதை குறிக்கின்றது. "கட்டளையின் மகன்" என்று அர்த்தப்படும் இவ்வார்த்தை, வாலிபனையோ அல்லது இதற்காகக் கொண்டாடப்படும் சடங்குகளையோ குறிக்கக் கூடும். Milton Steinberg, *அடிப்படை யூதத்துவம்.* [2]G. E. Ladd, *A Theology of the New Testament,* மத். 11:27ஐப் பற்றி, "பிதா குமாரனை அறிகிற அதே முறையிலேயே இயேசு பிதாவை அறிவார் .. ஆகவே இது தெய்வீக அறிவின் மட்டத்திலேயே இருக்கிறது" என்று Ladd குறிப்பிட்டிருக்கிறார்.

## மற்றவர்கள் இயேசுவை தெய்வீகத்துவமானவராகப் பார்த்தார்களா?

இயேசு தமது சொந்த அடையாளத்தை அறிந்திருந்தார். இயேசுவாலும் மற்றவர்களாலும் அது அறிக்கை செய்யப்பட்டதை அப்போஸ்தலர்கள் கேட்டிருந்தார்கள். இயேசுவை நாம் தேவனென்று அறிக்கை செய்கின் றோம், ஆனால் நாம் ஒரு சிலாக்கியமான நிலையில் இருக்கின்றோம். இயேசுவின் வரலாற்றை நாம் முழுமையாகக் கேட்டிருக்கின்றோம். வேதவசனங்களின் முழுமையான வெளிப்பாட்டை நாம் வாசித்திருக் கின்றோம். வேதாகம ரீதியான ஆச்சரியமான முடிவைப் பற்றி நாம் அறிந்து அதை ஆவலுடன் எதிர் நோக்கியிருக்கின்றோம்.

நீங்கள் எப்பொழுதாவது ஒரு புத்தகத்தின் கதை முடிவு எப்படி யிருக்கும் என்பதை அதன் முடிவுப் பகுதியை காணாதவாறு உங்களைத் தடுத்துக் கொண்டு ஒரு புத்தகத்தை வாசித்ததுண்டா? நீங்கள் வாசிக்கையில் அற்புதமான முடிவு பற்றி விழிப்புணர்வுடனும், உரையாடல்களில் மறைபொருள்களை உணர்ந்து கொள்ளவும், விவரணைகள் மற்றும் உறவு முறைகள் ஆகியவற்றை விளங்கிக் கொள்ளவும் முடிகின்றது. முடிவை முன்னதாகவே அறிந்து கொள்ளுதலானது நமக்குத் திருப்திகரமான ஒரு உணர்வைத் தரலாம், ஆனால் அப்புத்தகத்தின் கதாபாத்திரங்கள் அதன் முடிவு பற்றி அறியவில்லை என்பதை மறந்து போகலாம். தனிநபர்கள் ஏன் சில விஷயங்களைச் செய்கிறார்கள் அல்லது கூறுகின்றார்கள் என்று நாம் ஆச்சரியப்படுகின்றோம். நிச்சயமாக அவர்கள் மிகச் சிறப்பாக அறிந்திருக்க வேண்டும்! இல்லை, அவர்கள் அது எவ்விதம் முடிகின்றது என்பதை அறியவில்லை!

வேதவசனங்களை நாம் வாசிக்கையில், அதிகமாக யூகம் செய்து கொள்வது சுலபமாகும். உண்மையில் வாழ்ந்தவர்கள் அல்லது நிகழ்ச்சி களின் பதிவுகளில் உள்ள செயல்பாடுகள் மற்றும் வார்த்தைகளில் நமக்கு அனுகூலமான தோற்றத்தை நாம் தள்ளி, முழுமையான வரலாற்றை அறிவதிலிருந்து அவற்றைத் தேர்ந்தெடுக்கின்றோம்.

இயேசுவைப் பின்பற்றியவர்களோ அல்லது அவரை எதிர்த்தவர்களோ அவரது வாழ்வின் நிகழ்ச்சிகளில் இம்மானுவேல் - "தேவன் நம்மோடு இருக்கிறார்" என்பதன் ஆதாரத்தைக் காண ஆயத்தமாய் இருந்ததில்லை.

*இயேசுவைப் பற்றிய முழுமையான சத்தியத்தை வாசிப்பவர்கள் என்ற வகையில் நாம் இந்த சத்தியத்தை எதிர்பார்ப்பதில் மிகவும் கவனமாய் இருக்க வேண்டும். அது நமக்கு முன் விரித்துரைக்கப்படுவதை நாம் அனு மதிக்க வேண்டும். இந்தக் கொள்கையை நாம் வேண்டுமென்றே காணாது விடக் கூடாது. இயேசு, சத்தியத்தினிடம் வருதலின் ஆதாயத்தைப் பற்றிப் பேசினார், அது பக்குவமடையு முன்பு எதிர்நோக்குதல் பற்றி அவர் பேசவில்லை (யோவா. 8:32).*

*"யூதர்களின் ராஜா", "மேசியா" மற்றும் "தேவனுடைய குமாரன்" போன்ற சொற்றொடர்கள் இயேசு தெய்வீகமுள்ளவர் என்ற கருத்தை மறைமுகமாய் உணர்த்தத் தேவையில்லாத வகையில் அவரைப் பற்றி விளக்கப்படுத்த ஏவுதல் பெற்றிராதவர்களால் சில வேளைகளில் பயன்படுத்தப் பட்டிருக்கலாம். இஸ்ரவேலின் கடந்த காலத்தில், அரசர்கள், அபிஷேகம் பெற்றவர்கள் (மேசியாக்கள்) மற்றும் மொத்தத்தில் இஸ்ர வேலும் கூட தேவனால் தெரிந்து கொள்ளப்பட்டவர்கள் என்ற வகையில் "தேவனுடைய புத்திரர்கள்" என்று அழைக்கப்பட்டிருந்தனர்.*

*இயேசு தேவனுடைய குமாரன் மட்டுமல்ல, ஆனால் குமாரனாகிய தேவனாகவும் இருந்தார் என்பதற்கான திட்டவட்டமான, நம்பச் செய்யக் கூடிய ஆதாரத்தை நாம் எங்கு காண முடியும்? நாம் புதிய ஏற்பாட்டின் மற்ற எழுத்துக்களுக்குச் செல்ல முடியும்; இருப்பினும், நமக்குச் சுவிசேஷங் கள் மட்டுமே தேவைப்படுகின்றன. இயேசுவின் தனிப்பட்ட வாழ்வும் போதனைகளும் அவர் தெய்வீகத்துவமானவர் என்ற கருத்தை முன்னணிக்குக் கொண்டு வருகின்றன. நாம் சுவிசேஷ விபரங்களை நோக்கி, இயேசுவின் நாட்களில் இருந்தவர்கள் கண்டிராத ஆதாரங்களைக் காண முடியும். இது அவர்களைக் காட்டிலும் நாம் அதிகமான உள்ளறிவு உடையவர்கள் என்பதால் அல்ல, ஆனால் முழுமையான புதிய ஏற்பாட்டின் பின்னாளைய வெளிப்படுத்துதலை நாம் "முன்னோக்கியே நோக்கி" தனிச் சிறப்பான சலுகை பெற்றவர்களாய் இருக்கிறோம் என்பதாலேயே நம்மால் முடிகின்றது.*